பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 08 2026 WEDNESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்திய சுதந்திரப் போராட்டத்தில், வந்தேமாதரம் பாடல் மக்களிடையே தேசப்பற்றை ஊட்டியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. நீட் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினை எழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

3. சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு, வனப்பகுதிகளில் வாழும் யானைகள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

4. பங்களாதேஷ் ரயில்வே-க்கு LHB ரயில்பெட்டிகளை இந்தியா வழங்கவுள்ளது.

5. Europe Smash Table Tennis போட்டியில், இந்தியாவின் Syndrela Das - ஸ்லோவாக்கியாவின் Tatiana இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், வந்தேமாதரம் பாடல் மக்களிடையே தேசப்பற்றை ஊட்டியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தை ஒட்டி, இருசக்கர வாகனப் பேரணியை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், வந்தேமாதரம் படலின் 150-வது ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் நேதாஜி சுபாஷ்சந்திர போஸ், வீர்சாவர்கர், திருப்பூர் குமரன் உள்ளிட்டோரின் தியாகத்தை நினைவுகூர்வதாக அவர் கூறினார்.

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம், மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக கூறிய அவர், அனைவரும் இந்த இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் திரு. கிரண் ரிஜிஜு, திரு. கஜேந்திரசிங் ஷெகாவத், திரு. கிஷன் ரெட்டி, திரு. ஜிதேந்திர சிங், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

இதனிடையே, தமிழகத்தின், நாமக்கல் அஞ்சல் கோட்டம் சார்பில், இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்க விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

மக்கள் அனைவரும் இல்லங்களில் தேசியக்கொடியை ஏற்ற வேண்டும் என்று நாமக்கல் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திருமதி. இந்திரா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - இந்திரா 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை புத்தகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

*Triumph of the Indian Republic – My life My struggles* என்ற இந்த புத்தகத்தை வெளியிட்டுப் பேசிய பிரதமர், இளைஞர்கள் இந்த புத்தகத்தை அவசியம் வாசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு. ராம்நாத் கோவிந்த் குடியரசுத் தலைவராக பதவி வகித்த போது, தமக்கு வழிகாட்டியாக இருந்ததாக பிரதமர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நீட் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினை எழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், அவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா, கேள்வி நேரத்தை தொடங்க முயன்றார்.

நீட் விவகாரம் தொடர்பாக தில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது காவல்துறையினர் நடத்திய தாக்குதலை கண்டித்து எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பினர்.

*அப்போது பேசிய திரு. ஓம் பிர்லா, இன்று சர்வதேச இளைஞர்கள் தினம் கொண்டாடப்படுவதாக தெரிவித்தார்.*

*இந்திய இளைஞர்கள் கல்வி, அறிவியல், விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து பணியாற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.*

*ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆலோசனை நடத்தி, பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண வேண்டும் என்றும் அவையை சுமுகமாக நடத்த வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டார்.*

*இருப்பினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீட் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*>>>>>><<<<<<*

*இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர் விக்ரம் சாராபாயின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் விக்ரம் சாராபாய்-க்கு மரியாதை செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.*

*அறிவியல் துறையில் இந்தியாவை முன்னணி நாடாக மாற்றுவது என்ற அவரது கனவு நனவாகியுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.*

*இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், டாக்டர் விக்ரம் சாராபாய் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.*

*இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தை நிறுவியதில் அவரது பங்கு இன்றியமையாதது என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*உலக யானைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், யானைகளின் பாதுகாப்பிற்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.*

*நாடுமுழுவதும் 14 மாநிலங்களில் 33 பாதுகாப்பு மையங்களில் யானைகள் பாதுகாக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.*

*சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு, வனப்பகுதிகளில் வாழும் யானைகள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*வனப்பகுதிகளில் யானைகள் சுதந்திரமாக நடமாட, அப்பகுதியை ஒட்டி வாழும் கிராம மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று திரு. புபேந்தர் யாதவ் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இந்நாளையொட்டி, மத்திய வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் ஆசிய யானைகளில் 60 சதவீதம் இந்தியாவில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*பல்லுயிர் பெருக்கத்திற்கு யானைகளின் பங்கு இன்றியமையாதது அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

இதனிடையே, யானைகள் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்று உதகை அரசு கலைக் கல்லூரி விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் ராமகிருஷ்ணன், எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ராமகிருஷ்ணன் 34 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஹிமாச்சலப்பிரதேசத்தில் பெட்ரோல், டீசல் விலை நேற்று நள்ளிரவு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

பெட்ரோல் மற்றும் டீசல், லிட்டர் ஒன்றுக்கு 60 காசு உயர்த்தப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இதிலிருந்து கிடைக்கும் வருவாயை, ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் கணவனை இழந்தோர் நலனுக்காக பயன்படுத்தப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

இதனிடையே, ஹிமாச்சலப்பிரதேச பிரதேசத்தில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது, மக்கள் விரோத செயல் என்று அம்மாநில பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. ராகேஷ் குறை கூறியுள்ளார்.

இதன் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ர மாநிலம், Mumbai Ghatkopar-ல் கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவில் 6 பேர் உயிரிழந்தனர்.

இப்பகுதியை ஆய்வு செய்த பின், செய்தியாளர்களிடம் பேசிய மும்பை மேயர் திருமதி. **Ritu Tawde**, மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக கூறினார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாயும், காயமடைந்த 4 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் ரயில்வே-க்கு மேலும் 19 LHB ரயில்பெட்டிகளை இந்தியா வழங்கவுள்ளது.

பஞ்சாப் மாநிலம், Kapurthala ரயில்பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட இந்த ரயில் பெட்டிகள், பங்களாதேஷ் ரயில்வேக்கு வழங்கப்படவுள்ளது.

பங்களாதேஷ் ரயில் பயணிகளின் வசதிக்காக இந்த ரயில்பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள், குழந்தைகள் பாதுகாப்பு அறை மற்றும் தொழுகை அறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஹிமாச்சலப்பிரதேசத்தில் Gatlog பள்ளத்தாக்கில் கார் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 4 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 9 பேர், Nahan மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

Europe Smash Table Tennis போட்டியில், இந்தியாவின் Syndrela Das - ஸ்லோவாக்கியாவின் Tatiana இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஸ்வீடனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-4, 8-11, 11-9, 11-1 என்ற செட்கணக்கில் சிலியின் Daniela – Paulina Vega இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Diya Chitale இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சேப்பாக் - சேலம் அணியையும், திண்டுக்கல் - மதுரை அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>><<<<<<